ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான
முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2018)
First Efficiency Bar Examination for the Officers in
Sri Lanka Animal Production and Health Service – 2016 (2018)

**(01) நிதி முறைமைகள்**
Financial Systems

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

**1.** (i) 'வாக்குப்பணகணக்கு' என்பதனால் கருதப்படுவது எது என்பதனை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) ஆண்டு செலவின மதிப்பீட்டிற்காக நிதியீட்டம் செய்யப்படும் ஐந்து வழிகளினைக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

**2.** (i) ஒரு அரசாங்க திணைக்களத்தின் கணக்காளர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் ஆறு தொழிற்பாடுகளைக் (Functions) குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

(ii) நிதியாண்டின் இறுதியில் 'கட்டுநிதி மீதியினை தீர்த்தல்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்குக. *(10 புள்ளிகள்)*

**3.** (i) அரசாங்க திணைக்கத்தின் வாக்குபண (Votes ledger) பேரேட்டில் பதியப்படும் ஐந்து விடயங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) நி.பி. 139 இன் கீழ் பணகொடுப்பனவு உத்தியோகத்தர் (Paying Officer) ஒருவர் தனது கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு எவ்விடயங்களுக்கு பொறுப்பாக உள்ளார் என்பதனைக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

**4.** (i) நி.பி. 15 இன் கீழுள்ள முற்பண கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீட்டு எல்லைகள் எவை? *(05 புள்ளிகள்)*

(ii) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளத்திலிருந்து கழிக்கக்கூடிய நியதிச் சட்ட ரீதியான அறவீடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிக்கும் போது உம்மால் கருத்திற் கொள்ள வேண்டிய மூன்று காரணிகளினை குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iv) உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றினை நிறுவுதலினால் கிடைக்கக்கூடிய மூன்று நன்மைகளினைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(v) திணைக்கள கணக்குகளை திறைசேரி கணக்குகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்வதனினால் கிடைக்கக்கூடிய மூன்று நன்மைகளை பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

**5.** நி.பி. 103 (1) இன் கீழ் அரசாங்க ஆதனங்களுக்கு நட்டம் ஒன்று ஏற்படும்போது அல்லது ஏதாவது ஒரு ஆதனங்களுக்கு சேதம் ஏற்படும்போது அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய படிமுறைகளை சுருக்கமாக விளக்குக. *(25 புள்ளிகள்)*

**6.** பின்வரும் ஒவ்வொரு தலைப்பு தொடர்பாகவும் சிறுகுறிப்பு எழுதுக.

(i) காசோலைக்கு சிறப்பு கோடிடல்

(ii) பெறுகை முறை தொடர்பாக கடைகொள்ளல்முறை (Shopping method)

(iii) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

(iv) உயிர் வாழ்வு சான்றிதழ்

(v) திறைசேரி குறிப்புகள் *(05 × 5 = 25 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2018)**

First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2016 (2018)

**(02)** நிர்வாகம்
Administration

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**ஒவ்வொரு** பகுதியிலிருந்தும் **இரண்டு** வினாக்கள் வீதம் தேர்ந்தெடுத்து, **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** (i) அரச சேவைக்கு அலுவலரொருவரை ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் பயிற்சி அளிப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) பின்வரும் பயிற்சியளிக்கும் முறைகள் குறித்து விளக்குக.

(அ) சேவையின் ஆரம்பத்திலான பயிற்சி

(ஆ) சேவைக் காலப் பயிற்சி

(இ) சேவையின் முன்னதான பயிற்சி *(15 புள்ளிகள்)*

**2.** (i) அரச அலுவலகமொன்றைத் தாபிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை என்பதைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) மூடிய தளக்கோலம் என்பதிலுள்ள அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் குறித்து விளக்குக. *15 புள்ளிகள்)*

**3.** (i) அரச நிறுவனமொன்றில் பதவியுயர்வு பெறுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைவிதிகள் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. *(10 புள்ளிகள்)*

(ii) பதவியுயர்வை உழைத்துப் பெறுவதற்காக அலுவலரொருவர் பூர்த்தி செய்ய வேண்டிய 'திருப்திகரமான சேவை' என்பதை விளக்குக. *(15 புள்ளிகள்)*

## பகுதி II

**4.** (i) அரச அலுவலரொருவர் தமது தகுதிகாண் காலத்தினுள் அரச சேவைக்குப் பொருத்தமான ஒருவர் என உறுதிப்படுத்தப்படுவதற்கான முறையை விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) அரச சேவையின் நிரந்தரப் பதவியொன்றிற்கு புதிதாக நியமனம் பெறும் அலுவலரொருவரது தகுதிகாண் காலம் தொடர்பாக, மேற்பார்வை அதிகாரியின் பொறுப்புகள் பற்றி விளக்குக. *(15 புள்ளிகள்)*

**5.** (i) அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களைக் குறிப்பிட்டு, அவர்களால் அனுபவிக்க **முடியாத** அரசியல் உரிமைகள் யாவை என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர் ஒருவர், தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட வேண்டுமாயின், அது தொடர்பாக தாபனக் கோவையில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி விளக்குக. *(15 புள்ளிகள்)*

**6.** தாபனக் கோவையின் XLVII மற்றும் XLVIII ஆகிய அத்தியாயங்களின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் குறித்து சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை

(ii) முறையான ஒழுக்காற்று விசாரணையில் முறைப்பாட்டை முன்னளிக்கும் (வழக்குத் தொடுக்கும்) உத்தியோகத்தர்

(iii) ஒழுக்காற்றுக் கட்டளையொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

(iv) குற்றச்சாட்டுத் தாளில் கட்டாயமாக உள்ளடங்கப்பட வேண்டிய விடயங்கள்

(v) சிறு தண்டனைகள்

*(05 × 5 = 25 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2018)**
First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka
Animal Production and Health Service – 2016 (2018)

**(03) திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 1**
Departmental Regulations - 1

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

---

**1.** (i) மாடுகளை நம் நாட்டுக்கு இறக்குமதி செய்யும்போது, நோய்காவிகள் உள்வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திட கால்நடை உற்பத்தி சுகாதாரசேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு சட்டரீதியான அதிகாரங்களை வழங்கியுள்ள சட்டத்தின் பெயரை குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் இனங்கண்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மாடுகளை இறக்குமதி செய்யும்போது நோய்காவிகள் நாட்டுக்குள் வருவதைத் தடுத்திட கால்நடை உற்பத்தி சுகாதாரசேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** (i) 1986 இலக்கம் 15 இன் விலங்குகள் தீனிச்சட்டம் மற்றும் 2016 இலக்கம் 15 இன் விலங்குகள் தீனிச்சட்டம் (திருத்தியது) ஆகிய சட்டங்கள் எந்த நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை நிறைவுசெய்வதற்காக அச்சட்டங்களால் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**3.** (i) இலங்கை அரசாங்கத்தின் கால்நடை மருத்துவ அலுவலகத்தின் மூலமாக மாடுகளையும் எருமைகளையும் இனங்காண்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற முறையை சுருக்கமாக விளக்குக *(05 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட முறையை நடைமுறைப்படுத்துவதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரசேவை பணிப்பாளர் நாயகத்துக்கு சட்டரீதியான அனுமதியை வழங்கியுள்ள சட்டம் எதுவெனக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட முறையின் வெற்றி தோல்விகளை சுருக்கமாக விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) மாடுகளையும் எருமைகளையும் இனங்காணுவதன் முக்கியத்துவத்தை கலந்துரையாடுக. *(10 புள்ளிகள்)*

**4.** பின்வரும் தலைப்புகளின் கீழ் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலங்கையில், விற்பனைக்காக விலங்குத் தீனியை உற்பத்தி செய்வதற்காக ஒரு அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் *(05 புள்ளிகள்)*

(ii) இலங்கையில், கால்நடைகளிற்கான மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுதல் *(05 புள்ளிகள்)*

(iii) விலங்குகளிற்கு உதவும் முகமாக நிறுவப்படும் இல்லத்தை (animal clinic) பதிவு செய்தல் *(05 புள்ளிகள்)*

(iv) முட்டையை அடைகாத்து குஞ்சு பொரிக்கும் இடத்தை பதிவு செய்தல் *(05 புள்ளிகள்)*

(v) ஏற்றுமதிக்காக இறைச்சிகளைப் பதப்படுத்தும் தாபனத்தை பதிவு செய்தல் *(05 புள்ளிகள்)*

***

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (2018)**

First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2016 (2018)

**(04) திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 2**
Departmental Regulations - 2

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

---

**1.** மாடுகளுக்கான தீனியாக பயன்படுத்தப்படும் மேய்ச்சல் புல்லு மற்றும் வெட்டுப் புல்லு (Pasture and fodder) என்பனவற்றை காப்புச் செய்யும் முறை பற்றி விளக்குக.

**2.** (i) 'மாடுகளில் செயற்கை முறை சினைப்படுத்தல் (Cattle artificial insemination)' செயன்முறையை விளக்குக.

(ii) செயற்கை முறை சினைப்படுத்தலின் வெற்றிக்கு அதன் பின்னூட்டல் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தையும் பின்னூட்டல் நிகழ்த்தப்படும் விதத்தையும் விளக்குக.

**3.** பின்வரும் தலைப்புகளில் **நான்கினைப்** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலிங்கத் தன்மையை தீர்மானிக்கின்ற ஆழ்குளிரூட்டப்பட்ட மாட்டுச் சுக்கிலம்

(ii) தூய்மையான பால் உற்பத்தி

(iii) கால் - வாய்நோய்

(iv) இறைச்சிக்காக மாடுகளைக் கொல்லும்போது முழுமையான மரண பரிசோதனை (Antimortem inspection)

(v) உடற்கல எண்ணிக்கை (Somatic cell count) யை பாலின் தரத்தின் ஒரு சுட்டியாக பயன்படுத்துதல்

**4.** வர்த்தக பால் உற்பத்தி கறவை மாட்டு பண்ணையின் (Commercial dairy herd) இனப்பெருக்க வினைத்திறனை அளவீடு செய்தவற்காக பயன்படுத்தப்படும் இனப்பெருக்க சுட்டிகளை விபரிக்குக.

**5.** (i) போவயின் வயிரல் டயரியா - மியுகோசல் டிசீஸ் (BVD - MD) நோய் என்றால் என்னவென்பதை விளக்குக.

(ii) மாடுகளின் இனப்பெருக்கத்தினை BVD - MD நோய் பாதிக்கும் விதத்தை விளக்குக.

(iii) BVD - MD நோய் பரவுகின்ற விதத்தையும் இனங்காணும் விதத்தையும் விளக்குக.

(iv) BVD - MD நோயைக் கட்டுப்படுத்தும் விதத்தை விளக்குக.

***

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka